போக்குவரத்து துறை

அனுப்புநர்

திரு. ந. அழகரசு,
துணைப் போக்குவரத்து ஆணையர், (பொ)
தஞ்சாவூர் சரகம்.

பெறுநர் (மின்னஞ்சலில்)

அனைத்து வட்டாரப் போக்குவரத்து
அலுவலர்கள்/
மோட்டார் வாகன ஆய்வாளர்கள்,
(செயலாக்கப்பிரிவு உட்பட),
தஞ்சாவூர் சரகம்.

ந.க.எண்: 150/அ4/2021 நாள்: 22.03.2021

ஐயா,

பொருள்: போக்குவரத்து துறை – மோட்டார் வாகனம் – போக்குவரத்து அல்லாத வாகனங்களை மோட்டார் வாகன சட்டத்திற்கு புறம்பாக போக்குவரத்து வாகனமாக பயன்படுத்துதல் - புகார்கள் குறித்து அறிவுரைகள் வழங்கி ஏற்கனவே கடிதம் வரப்பெற்றது – நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விபரம் தெரிவித்தல் - குறித்து.

பார்வை:
1. கூடுதல் தலைமைச் செயலாளர் / போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்: 5265/HB2/2021 நாள்: 04.03.2021.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்: 17.03.2021.
3. கூடுதல் தலைமைச் செயலாளர் / போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்: 5265/HB2/2021 நாள்: 04.03.2021.

*****************

பார்வை-1ல் கண்ட 04.03.2021 தேதியிடப்பட்ட கடிதத்தில் போக்குவரத்து அல்லாத வாகனங்களை போக்குவரத்து வாகனமாக மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளுக்கு புறம்பாக இயக்குவது தொடர்பாக புகார்கள் அடிக்கடி வந்த வண்ணம் உள்ளதாகத் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டு, Thiru. C. Kamalahasan, Founder/President, South India Vehicle Drivers Munetra Kazhagam, 24, Irratamalai Srinivasan Street, Samathuva Periyar Nagar, Old Perungalathur, Chennai – 600 063 அவர்களுக்கு நகலிடப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து, பார்வை-2ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் போக்குவரத்து வாகனங்களாக இயக்குவதைக் கண்டறிந்து சோதனை அறிக்கை வழங்கி தக்க நடவடிக்கை எடுத்து அதன் விபரத்தினைத் தெரிவிக்குமாறு இச்சரகத்திலுள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு நகல் Thiru. C. Kamalahasan, Founder/President, South India Vehicle Drivers Munetra Kazhagam, 24, Chennai – 600 063 அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில் பார்வை-3ல் கண்ட 04.03.2021 தேதியிடப்பட்ட அதேகடிதத்தில் உரிமைக்குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம், எண்:3, கட்டத்தொட்டி சந்து, புதுமார்க்கெட், மேற்கு தாம்பரம், சென்னை 45 மற்றும் ஜெய் தமிழ்நாடு அனைத்து வாகன உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் சங்கம், எண்:14/2, முதல்மாடி, கிருஷ்ணன் முதல்தெரு, நாவலர் காலனி, சூலைப்பள்ளம், எம்.ஜி.ஆர். நகர், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-78 ஆகியோருக்கு நகலிடப்பட்டு மின்னஞ்சல் வரப்பட்டுள்ளது.

Scanned By Scanner Go

எனவே, மேற்காணும் பொருள் குறித்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால் சரகத்திலுள்ள அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி மேற்படி வாகனங்களைக் கண்டறிந்து மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளின்படி தக்க நடவடிக்கையினை உடனுக்குடன் எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், இதுகுறித்த அறிக்கையினை பிரதி மாதம் 5ம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

துணைப் போக்குவரத்து ஆணையர், (பொ)
தஞ்சாவூர் சரகம்.

நகல்:

1. உரிமைக்குரல் ஓட்டுநர் தொழிற்சாங்கம், எண்:3, கட்டத்தொட்டி சந்து, புதுமார்க்கெட், மேற்கு தாம்பரம், சென்னை 45.
2. ஜெய் தமிழ்நாடு அனைத்து வாகன உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் சங்கம், எண்:14/2, முதல்மாடி, கிருஷ்ணன் முதல்தெரு, நாவலர் காலனி, சூலைப்பள்ளம், எம்.ஜி.ஆர். நகர், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-78.

கூடுதல் தலைமை செயலாளர் / போக்குவரத்து ஆணையர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

Scanned By Scanner Go